# ‘இல்லத்தரசி’ திட்டத்தால் ‘பியூஸ்’ போன பழனிசாமி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி!

இளைஞர்களுக்கு கட்டணமில்லாமல் வேலைவாய்ப்புக்கான திறன் பயிற்சிகள் வழங்கும் நான் முதல்வன் திட்டத்தின் அடுத்தகட்டமாக, நான் முதல்வன் 2.0 செயல்படுத்தப் போகிறோம்!

**தேர்தல் வாக்குறுதிகள்!**

புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன், திட்டத்தில் கல்லூரிக்கு செல்லும் மாணவர்களுக்கு இப்போது மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கிக்கொண்டு வருகிறோம் இல்லையா? இனி அதை ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப் போகிறோம்.

அதுமட்டுமல்ல, வரும் 5 ஆண்டுகளில் 35 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் கொடுக்கப் போகிறோம்!

முதியோர், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற பெண்கள் என எல்லோருக்குமான உதவித் தொகையும் டபுள் மடங்காக உயர்த்தி வழங்கப்பட இருக்கிறது.

எல்லா சட்டமன்றத் தொகுதிகளிலும் முதல்வர் படைப்பகங்கள் அமைக்கப் போகிறோம்! இது நூலகம் மட்டுமல்ல, மீட்டிங் ரூம், ஆபிஸ் ரூம், அதிவேக இண்டர்நெட் வசதி என்று எல்லா வசதிகளும் கொண்ட கட்டடமாக முதல்வர் படைப்பகம் இருக்கும்! தனியாரில் ஆயிரக்கணக்கில் செலவாகும் வசதிகளை, மிக மிக குறைந்த கட்டணத்தில் வழங்கப் போகிறோம்!

பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தி வழங்க போகிறோம்!

எல்லாவற்றிற்கும் மேல், பெண்கள் ஒவ்வொருவரும் மகிழ்ச்சி அடைவது மாதிரி ஒரு அல்டிமேட் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறோம். இல்லத்தரசி திட்டம்! எட்டாயிரம் ரூபாய் கூப்பன்! எதற்கான கூப்பன்? இல்லத்தரசிகளான நீங்கள் உங்களுக்குத் தேவையான வீட்டு உபயோகப் பொருளை, உங்கள் ஊரில், உங்களுக்கு விருப்பமான கடையில், உங்களுக்கு பிடித்த மாதிரி வாங்கிக் கொள்வதற்கான கூப்பன்! புதிதாகவும் வாங்கிக் கொள்ளலாம். பழையவற்றைக் கொடுத்து விட்டு எக்ஸ்சேஞ்சும் செய்து கொள்ளலாம். என்ன வாங்க வேண்டும், எப்படி வாங்க வேண்டும், எந்த கடை, என்ன கலர் எல்லாமே உங்களின் சாய்ஸ்தான்! இந்தப் கூப்பனை கொடுத்து, வாஷிங் மெஷின், ஃபிரிட்ஜ், டி.வி., கிரைண்டர், மிக்சி, மைக்ரோவேவ் அவன், மின் அடுப்பு போன்ற எந்தப் பொருளையும் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். என்னை பொறுத்தவரை நம்முடைய குடும்பத்தலைவிகளின் வீட்டு வேலை சுமை பெருமளவு குறைய வேண்டும். அதுதான் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம்!

இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் இந்தத் திட்டத்தைப் பற்றித்தான் எல்லோரும் மகிழ்ச்சியாக பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர்தான் சோகமாக இருக்கிறார். யார் அவர்? அவர்தான் பழனிசாமி! இல்லத்தரசி திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பை பார்த்துவிட்டு, “இதில் தி.மு.க.காரர்கள் கமிஷன் அடிப்பார்கள்” என்று அடிப்படையே இல்லாமல் புலம்பிக் கொண்டிருக்கிறார். பணத்திற்கு பதிலாக கூப்பன் தருகிறோம். மக்கள் கடையில் கொடுத்து பொருளை வாங்கிக் கொள்ளப் போகிறார்கள். இதில் எங்கே ஊழலும், கமிஷனும் வந்தது? தன்னைப்போன்றே பழனிசாமி எல்லோரையும் நினைத்துவிட்டார். எது எப்படியோ, இல்லத்தரசி அறிவிப்பால் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, இப்போது பியூஸ் போன சாமி ஆகிவிட்டார்!

**இன்னும் பல அறிவிப்புகள்!**

தேர்தல் அறிக்கையில் இன்னும் பல அறிவிப்புகளும் இருக்கிறது:

தொழிற்சாலைகள் அதிகமுள்ள நகரங்களில், பெண்கள் வேலைக்குச் செல்வதை எளிதாக்கும் பொருட்டு, ஆயிரம் குழந்தைகள் காப்பகங்களை உருவாக்கப் போகிறோம்.

திராவிட மாடல் 2.0வில் பிற்படுத்த ப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர், தொழில் தொடங்க கடன் பெறும் உச்சவரம்பு 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

கட்டுமானத் தொழிலாளர்களுக்காக தமிழ்நாடு முழுவதும் 500 உழைப்பாளர் கூடங்கள் அனைத்து வசதிகளுடன் அமைக்கப்படும்.

மகளிர் சுய உதவிக் குழு பெண்கள் ஷேர் ஆட்டோ வாங்க மானியத்துடன் கூடிய வங்கி கடன் பெற்றுத் தரப்படும்.

நெசவாளர்களின் நலனுக்காக தமிழ்நாட்டில் 10 கைத்தறிப் பூங்காக்கள் அமைக்கப்படும்.

50 கைத்தறிக் குழுமங்கள் அமைக்கப்படும்.

10 ஆயிரம் கைத்தறிகளை 90 விழுக்காடு மானியத்துடன் நவீனப்படுத்துவோம்.

முதியோர்களுக்கான அன்புச்சோலை இல்லங்கள் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்படும்.

அனைத்து அரசுப் பள்ளிகளிலும் நூறு விழுக்காடு ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்படும்.

கலைஞர் கனவு இல்லம் உள்ளிட்ட திட்டங்கள் மூலமாக, வீடற்ற ஏழைகளுக்கு அடுத்த 5 ஆண்டுகளில் 10 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும்.

> **நாம் இப்போது போராடுவது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்காக மட்டுமல்ல; ஒரு கூட்டணியின் வெற்றிக்காக மட்டுமல்ல, தமிழ்நாட்டின் வெற்றிக்காக! மறந்துவிடக் கூடாது. தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா? என்ற இந்த ஜனநாயகப் போரில், அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, விருதுநகர் மக்கள் அனைவரும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரிக்க வேண்டும்! சொன்னதைச் செய்யும் தலைவர் கலைஞரின் மகனாக கேட்கிறேன்.**

இங்கு இருக்கும் விருதுநகர் சுற்றுவட்டார மக்களை மகிழ்விக்கும் ஸ்பெஷல் வாக்குறுதிகளும் இருக்கிறது! விருதுநகர், தூத்துக்குடியில் பசுமை பட்டாசு உற்பத்தி ஊக்குவிக்கப்படும்.

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்திருக்கும் பனைத் தொழிலாளர்களுக்கு தேவையான பனைமரம் ஏறும் கருவிகள் உட்பட இதர கருவிகள் 100 விழுக்காடு மானியத்துடன் வழங்கப்படும்.

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்திருக்கும் பனைத் தொழிலாளர்களுக்கு காப்பீட்டு வசதி ஏற்படுத்தப்படும். அவர்கள் குடும்பத்திற்கு கல்வி, மருத்துவம் ஆகியவற்றிற்கு கூடுதல் உதவிகள் வழங்கப்படும்.

**தேர்தல் களத்தின் சூப்பர் ஸ்டார்!**

இப்படி, தமிழ்நாட்டின் ஒவ்வொரு துறையையும், ஒவ்வொரு தரப்பினரையும் மனதில் வைத்து தேர்தல் அறிக்கையை தயார் செய்திருக்கிறோம். எப்படிப்பட்ட அறிக்கை இது? ஆறில் இருந்து அறுபது வரை, பெண்கள் முதல் ஆண்கள் வரை, இளைஞர்கள் முதல் முதியோர் வரை தி.மு.க. தேர்தல் அறிக்கை எல்லோருக்கும் பிடிக்கும்! பிடிக்காதவர்களே இருக்க முடியாது! அதனால்தான் இதை ‘2026 தேர்தல் களத்தின் சூப்பர்ஸ்டார்’ என்று சொல்லி நான் அறிமுகப்படுத்தினேன்.

வாக்குறுதியை யார் வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால், தி.மு.க. கொடுக்கும் வாக்குறுதியைதான் மக்கள் நம்புகிறார்கள்! மற்றவர்கள் என்ன சொன்னாலும் அதற்கு எந்த மதிப்பும் இல்லை. யார் சொல்கிறார்கள் என்பதை பொறுத்துதான் அதற்கான மதிப்பும்.

என்.டி.ஏ-வைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாட்டிற்கு எதிராக எல்லா வேலையும் பார்த்துக்கொண்டு, தேர்தல் வந்தால் தமிழ் மேல் பாசம் இருப்பது மாதிரியும், காமராசர், எம்.ஜி.ஆர். மாதிரி தலைவர்களை சொந்தம் கொண்டாடவும் புறப்பட்டுவிடுகிறார்கள். இவர்களின் சங்கி கூட்டம் தான், 1966ஆம் ஆண்டு காமராசரை டெல்லியில் வீட்டோடு வைத்து கொளுத்த பார்த்தார்கள். “மனுதர்மத்திற்கும் காமராசரின் மனித தர்மத்திற்கும் நடக்கும் பலாத்கார போராட்டம்” என்று தந்தை பெரியார் கண்டித்தார். இப்படி, காலம்தோறும் தமிழ் மீதும், தமிழர்கள் மீதும், தமிழ் தலைவர்கள் மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் இவர்களுக்கு வெறுப்புதான்!

**தமிழின விரோதிகளுடன் கூட்டணி வைத்துள்ள பழனிசாமி!**

இப்படிபட்ட தமிழின விரோதி களுடன் பழனிசாமி கூட்டணி வைத்திருக்கிறார். பா.ஜ.க.வின் ஒரே நோக்கம் தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுப்பதுதான்! NDA ஆட்சி தமிழ்நாட்டிற்கு வந்தால் என்ன ஆகும் என்று நாம் கற்பனை செய்து பார்க்க வேண்டியது கூட இல்லை. இந்தியா முழுவதும் பா.ஜ.க. புகுந்த மாநிலங்கள் என்ன கதியில் இருக்கிறது? பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்த தலைவர்களும், கட்சிகளும் என்ன ஆனார்கள் என்று பார்த் தாலே நமக்கு பதில் கிடைத்துவிடும்!

நாம் இப்போது போராடுவது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்காக மட்டுமல்ல; ஒரு கூட்டணியின் வெற்றிக்காக மட்டுமல்ல, தமிழ்நாட்டின் வெற்றிக்காக! மறந்துவிடக் கூடாது. தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா? என்ற இந்த ஜனநாயகப் போரில், அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, விருதுநகர் மக்கள் அனைவரும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரிக்க வேண்டும்! சொன்னதைச் செய்யும் தலைவர் கலைஞரின் மகனாக கேட்கிறேன்.

அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களுக்கும், திருச்சுழி சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் மாண்புமிகு அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும், சாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் கடற்கரை ராஜ் அவர்களுக்கும், ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் தங்கபாண்டியன் அவர்களுக்கும் நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்! அதேபோல், விருதுநகர் சட்டமன்றத் தொகுதியில் நமது தோழமைக் கட்சியான தே.மு.தி.க.வின் வெல்லும் வேட்பாளர், நம்முடைய மதிப்பிற்குரிய கேப்டனின் மகன், விஜய் பிரபாகரன் அவர்களுக்கு முரசு சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்! சிவகாசி சட்டமன்றத் தொகுதியில் சகோதரர் ராகுல் காந்தியின் ஆதரவு பெற்ற காங்கிரஸ் வேட்பாளர் அசோகனுக்கு கை சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்! திருவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தோழமை இயக்கமாம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த தோழர் மகாலிங்கம் அவர்களுக்கு, கதிர் அரிவாள் சின்னத்தில் நீங்கள் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

அமைய இருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில், எங்கள் சாதனைகளை நாங்களே முறியடிக்கும் வகையிலான ஆட்சியை வழங்குவோம். நாடு வளம் பெற நல்லாட்சி தொடர்ந்திட ஆதரிப்பீர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை!

வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி மீண்டும் அமைவது உறுதி!

# கரூர், கோவை மாவட்டங்களை வளர்ச்சி பெற்ற மாவட்டங்களாக உருவாக்குவோம்!

### கரூர் தேர்தல் பணிமனை திறப்பு விழாவில் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!

கரூர், ஏப். 7-

கரூர் கோவை சாலையில் கரூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிமனை திறப்பு விழா நடைபெற்றது. கழக வெற்றி வேட்பாளர் ஆசி. எம்.தியாகராஜன் ஆதரவு கேட்டு பேசினார். பின்னர் கரூர் மாவட்ட கழக செயலாளர், மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.



அவர் பேசியதாவது:

கரூர் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளர் ஆசி தியாகராஜன் 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார். கரூர் மாவட்டத்திற்கு ஐந்தாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வளர்ச்சித் திட்டங்களை வழங்கி உள்ளார்கள். இதனை மக்களிடம் கூறி வாக்கு சேகரித்து வருகிறோம். ஆனால் அடிமை அ.தி.மு.க. ஆட்சியின்போது எந்த திட்டத்தையும் நிறைவேற்றியதாக அவர்கள் பட்டியல் வெளியிடவில்லை. இங்கிருந்து சற்று தூரத்தில் தான் பெட்ரோல் பங்க் இருக்கிறது அதன் ஓனர் யார் உங்களுக்கு தெரியும்.

கொரோனா காலத்தில் பாமாயில் கொடுத்தது யார் என்பது உங்களுக்கு தெரியும். கீழே இருந்து பெண்கள் குரல் கொடுக்கிறார்கள் அதுவும் கெட்டுப் போன பாமாயில் என்று. தாந்தோணி மலை தேர் திருவிழாவுக்கு சென்றால் கூட பொட்டு கொடுப்பார்கள். இவர்கள் நான்காண்டு காலம் மக்களை மறந்து விட்டு இப்போது பொட்டு, தட்டையும் கொடுத்து ஓட்டு வாங்கலாமா என மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். தப்பு கணக்கு போடுகிறார்கள். கரூரும், கோவையும் எனது கண்களைப் போல.

கரூர் தொகுதிக்கு புதிய பேருந்து நிலையம், காமராஜர் மார்க்கெட், மீன் மார்க்கெட், வேளாண்மை கல்லூரி, இசைப்பள்ளிக்கு கட்டிடம், மாவட்ட மைய நூலகம், அறிவியல் பூங்கா, தோழி தங்கும் விடுதி என தொடர்ச்சியான வளர்ச்சித் திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். இந்த திட்டங்களை எல்லாம் மேலும் தொடர்ந்து பெற்றிட உதயசூரியனை ஆதரிக்க வேண்டும்.

திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்ததும் மகளிர் உரிமைத் தொகை ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும் மகளிருக்கு ரூ. 8000 மதிப்புள்ள கூப்பன் வழங்கப்பட்டு விருப்பம் போல் பொருட்களை வாங்கிடலாம். அரசியலில் என்னை கைப்பிடித்து அழைத்து வந்தவர் அண்ணன் ஆசி தியாகராஜன். நீங்கள் தியாகராஜன் அவர்களுக்கு அளிக்கின்ற ஆதரவு என்பது உங்கள் தம்பிக்கு, அண்ணனுக்கு, தோழனுக்கு, மகனாக இருக்கின்ற இந்த செந்தில் பாலாஜிக்கு அளிக்கின்ற வாக்குகள். கரூர் மாவட்டத்தில் நான்கு தொகுதிகளிலும் உதய சூரியன் வென்றது என்கிற சரித்திர சாதனையை உருவாக்கித் தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

சிலபேர் கணக்கு போடுகிறார்கள் அவர் இங்கு இல்லை, அங்கே போய்விட்டார் ஈசியாக ஜெயித்து விடலாம் என்று. எங்கே போனாலும் இங்கு தான் இருப்போம். 89 ஆயிரம் குடும்பங்களிலும் தம்பியாக, அண்ணனாக, நான் இருப்பேன். என்னை உருவாக்கியது பெற்றோர். ஆனால் இந்த உலகத்திற்கு அடையாளம் காட்டியது கரூர் தொகுதி மக்கள். என் வாழ்நாள் முழுக்க கரூர் தொகுதி மக்களுக்கு கடமைப்பட்டு இருக்கிறேன். கரூர் மற்றும் கோவை மாவட்டங்களை வளர்ச்சி பெற்ற மாவட்டங்களாக உருவாக்குவோம். வாக்களிப்பீர் உதயசூரியனுக்கே. இவ்வாறு அவர் பேசினார்.

**வேட்புமனு தாக்கல்!**

பின்னர் ஆசி எம். தியாகராஜன் கரூர் தேர்தல் அதிகாரியிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., ஜோதி மணி எம்.பி., மற்றும் தோழமைக் கட்சியினர் உடன் இருந்தனர். வேட்பு மனு தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த செந்தில் பாலாஜி கூறியதாவது:

எதிர்க்கட்சித் தலைவர் தோல்வியை உணர்ந்து கொண்ட காரணத்தினால், அந்த விரக்தியில் கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தி வருகிறார். அவர்களுக்கு நாகரீகம் தெரியாது. எங்கள் தலைவரை பாருங்கள் எவ்வளவு நாகரிகத்துடன் பேசுகின்றார்கள்.

மக்கள் எல்லாவற்றையும் புரிந்து வைத்திருக்கிறார்கள். 200க்கும் மேற்பட்ட இடங்களில் கழக கூட்டணி வெற்றி பெறும். கரூரில் 4 தொகுதிகளிலும், கழகம் மகத்தான வெற்றி பெறும். கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததுமே கழகத் தலைவர் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு, வெல்லும் தமிழ் பெண்கள், என தொடர்ந்து தேர்தல் பணிகளை வழங்கி கழகத்தினரிடம் வேலை வாங்கி இருக்கிறார்கள். தொடர்ந்து நாங்கள் பணியாற்றி வருகிறோம் யாரைப் பற்றியும் கவலைப்படவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.



கரூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் ஆசி.எம். தியாகராஜன் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., ஜோதிமணி எம்.பி, மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.


